இண்டியன் பேங்க் Indian Bank
இலாஹாபாத் ALLAHABAD

(Corporate Office No. 254-260 Avvai Shanmugam Salai Wing 2-C Royapettah, Chennai 600 014, India)

31 மார்ச் 2023 நிலவியபடி இருப்புநிலைக் குறிப்பு

(ரூபாய் ஆயிரத்தில்)

	31.03.2023 நிலவியபடி	31.03.2022 நிலவியபடி
மூலதனமும் பொறுப்புகளும்		
மூலதனம்	1245 44 11	1245 44 11
காப்புநிதியும் உபரியும்	46727 31 46	42463 36 31
வைப்புத் தொகைகள்	621165 75 65	593617 81 37
வாங்கிய கடன்	22073 03 09	17208 97 47
இதர பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்	19289 18 81	17132 46 25
மொத்தம்	**710500 73 12**	**671668 05 51**
சொத்துகள்		
RBI-ல் உள்ள ரொக்கமும் இருப்புகளும்	32692 63 01	58554 60 97
வங்கிகளிலுள்ள இருப்பும் கேட்டவுடன் மற்றும் குறுகிய அறிவிப்பில் உள்ள பணமும்	17439 94 87	21361 44 19
முதலீடுகள்	185988 25 25	174558 58 80
முன்பணங்கள்	449296 73 37	389186 06 32
நிலையான சொத்துகள்	7459 04 04	7683 71 16
இதர சொத்துகள்	17624 12 58	20323 64 07
மொத்தம்	**710500 73 12**	**671668 05 51**
சார்புநிலைப் பொறுப்புகள்	381303 03 27	355947 25 18
வசூலுக்கான உண்டியல்கள்	16082 16 20	14144 89 14
மூலதன நிறைவு விகிதங்கள் (%) பேசல் III		
பிரிவு I மூலதனம்	12.89	12.53
உபரி பிரிவு I	0.59	0.64
பிரிவு II மூலதனம்	3.01	3.36
மொத்தம்	**16.49**	**16.53**
பங்குரிமை விகிதம் - இந்திய அரசாங்கம்	80%	80%

31 மார்ச் 2023 முடிவற்ற ஆண்டுக்குரிய லாப நட்டக் கணக்கு

(ரூபாய் ஆயிரத்தில்)

	31.03.2023 முடிவுற்றது	31.03.2022 முடிவுற்றது
I. வருமானம்		
ஈட்டப்பட்ட வட்டி	44942 21 29	38856 22 07
இதர வருமானம்	7143 06 26	6915 44 97
மொத்தம்	**52085 27 55**	**45771 67 04**
II. செலவினம்		
வட்டிச் செலவு	24716 75 04	22128 27 05
நடைமுறை செலவினம்	12097 90 28	10926 50 28
ஒதுக்கீடுகளும் சார்புநிலைப் பொறுப்புகளும்	9988 92 02	8772 07 65
மொத்தம்	**46803 57 34**	**41826 84 98**
III. இலாபம்/நட்டம்		
ஆண்டுக்கான நிகர இலாபம்/நட்டம்(-)	5281 70 21	3944 82 06
முன்கொண்டுவரப்பட்ட இலாபம்/நட்டம்(-)	129 77 18	100 16 28
கழிக்க: மற்ற சரிசெய்தல்கள்	-	-23 21 49
மொத்தம்	**5411 47 39**	**4021 76 85**
IV. ஒதுக்கீடுகள்		
இவற்றுக்கு மாற்றம்:		
சட்டப்பூர்வ காப்புநிதிகள்	1320 43 00	986 21 00
மூலதனக் காப்புநிதிகள்	-	147 90 00
சிறப்பு காப்புநிதிகள் IT சட்டம் பிரிவு 36 (1)(viii)-ன் கீழ்	191 73 00	108 35 00
வருமானக் காப்புநிதிகள்	2655 00 00	1800 00 00
ஊழியர் நல நிதி	40 00 00	40 00 00
பங்கு ஈவுத்தொகை	1071 07 94	809 53 67
இருப்புநிலைக் குறிப்பில் சேர்க்கப்பட்ட இருப்புகள்	133 23 45	129 77 18
மொத்தம்	**5411 47 39**	**4021 76 85**
பங்கு ஒன்றின் வருமானம் ரூபாயில் (அடிப்படை & ரொக்கம்)	42.41	32.38

வங்கி கலைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டால், கலைப்பு அல்லது அதற்கு நிகரான நடவடிக்கைகள் வங்கியில் மேற்கொள்ளப்பட்டால், வைப்புத் தொகைகளைத் திருப்பி வழங்குவதில் எங்கள் தலைமை அலுவலகம் வங்கியின் வெளிநாட்டு கிளைகளின் வைப்புதாரர்களுக்குத் தாய்நாட்டு வைப்புதாரர்களைவிடக் குறைந்த முன்னுரிமை வழங்கவேண்டும் என எங்கள் தாய் நாடு - இந்தியா நிபந்தனை விதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கை

இந்திய வங்கி இயக்குநர்கள் சபைக்கு

கருத்து

1. நாங்கள் இங்குத் தரப்பட்டுள்ள இந்தியன் பேங்கின் ("வங்கி") 2023 மார்ச் 31-ம் தேதி முடிவுற்ற காலாண்டுக்கான மற்றும் ஆண்டுக்கான தனித்த நிதிநிலை முடிவுகளை ("அறிக்கை") தணிக்கை செய்தோம். அவை SEBI (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015 மாற்றப்பட்ட ("பட்டியலிடுவதற்கான விதிமுறைகள்") விதிமுறை 33 மற்றும் 52-க்கு இணங்கவும் விதிமுறை 63(2)-ன் கீழும் வங்கியால் சமர்பிக்கப்பட்டவையாகும். ஆனால் பேசல் III முதலீடு விதிமுறைகளின் கீழ் லிவரேஜ் விகிதம், நிகர நிலையான நிதி விகிதம் மற்றும் ரொக்கப்புழக்க பாதுகாப்பு விகிதம் உட்பட 2023 மார்ச் 31-ம் தேதியிலான பில்லர் 3 வெளியீடுகள் சார்ந்த வெளியீடுகள் வங்கியால் அதன் இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த இணையப்பக்க முகவரி நிதிநிலை முடிவுகளில் தரப்பட்டுள்ளன. ஆனால், அவை எங்களால் தணிக்கை செய்யப்படவில்லை.

2. எங்கள் கருத்துப்படியும், எங்களுக்குக் கிடைத்த தகவல்களும், தரப்பட்ட விளக்கங்களும், பத்தி 6-ல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் வங்கியின் கிளை தணிக்கையாளர்களின் அறிக்கைகளையும் கருத்தில்கொண்டு, இந்த தனித்த நிதிநிலை முடிவுகள்:

i. SEBI (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015 விதிமுறை 33 மற்றும் 52-க்கு இணங்கவும் விதிமுறை 63(2)-ன் தேவைகளுக் கேற்ப தரப்பட்டுள்ளன. ஆனால் பேசல் III முதலீடு விதிமுறைகளின் கீழ் லிவரேஜ் விகிதம், நிகர நிலையான நிதி விகிதம் மற்றும் ரொக்கப்புழக்க பாதுகாப்பு விகிதம் உட்பட 2023 மார்ச் 31-ம் தேதியிலான பில்லர் 3 வெளியீடுகள் சார்ந்த வெளியீடுகள் வங்கியால் அதன் இணையப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த இணையப்பக்க முகவரி நிதிநிலை முடிவுகளில் தரப்பட்டுள்ளன. ஆனால், அவை எங்களால் தணிக்கை செய்யப்படவில்லை; மற்றும்

ii. சம்பந்தப்பட்ட கணக்கியல் தரங்களிலுள்ள அடையாளம் காண்பது மற்றும் அளவீட்டு கொள்கைகளுக்கு இணங்கவும் RBI வழிகாட்டுதல்கள் மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகர லாபம் சார்ந்த இதர கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்கவும் 2023 மார்ச் 31-ம் தேதி முடிவுற்ற காலாண்டுக்கான மற்றும் ஆண்டுக்கான இதர நிதிநிலை தகவல்களையும் உண்மையாகவும் சரியாகவும் வெளியிடுகிறது.

தனித்த நிதிநிலை முடிவுகளுக்கான இயக்குநர்கள் சபையின் பொறுப்புகள்

3. இந்த தனித்த நிதிநிலை முடிவுகள் சம்பந்தப்பட்ட தணிக்கை செய்யப்பட்ட வருடாந்திர தனித்த நிதிநிலை அறிக்கைகளில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாளம் காண்பது மற்றும் அளவீட்டு கொள்கைகளுக்கு இணங்கவும், ICAI வெளியிட்ட கணக்கியல் தரங்களுக்கு இணங்கவும், வங்கி விதிமுறை சட்டம் 1949 சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கவும், இந்தியா ரிசர்வ் வங்கி (RBI) அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ("RBI வழிகாட்டுதல்கள்") இணங்கவும், நீதித்துறை தீர்ப்புகள் மற்றும் பட்டியலிடுவதற்கான விதிமுறைகள் 33-க்கு இணங்கவும் வங்கியின் நிதிநிலை அறிக்கைகளையும், நிதிநிலை நிலவரம், நிதிநிலை செயல்பாடு மற்றும் இதர நிதிநிலை தகவல்களையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் தயாரிப்பது வங்கி இயக்குநர்கள் சபையின் பொறுப்பாகும்.

தனித்த நிதிநிலை முடிவுகளின் தணிக்கைக்கான தணிக்கையாளர்களின் பொறுப்புகள்

4. முழு தனித்த நிதிநிலை அறிக்கைகளில், மோசடி அல்லது பிழையால், முக்கிய விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதிப் பெற்று, எங்கள் கருத்தை உள்ளடக்கும் தணிக்கையாளர்களின் அறிக்கையை வெளியிடுவதே எங்கள் இலக்கு. மேலும் நாங்கள்:

i பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், இயக்குநர்கள் சபை செய்த கணக்கியல் உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத் தன்மையையும் மதிப்பிடுகிறோம்.

ii தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை இயக்குநர்கள் சபை பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்கவேண்டும். அதோடு, பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்துக் குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால், தனித்த நிதிநிலை அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்கவேண்டும், அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தைத் திருத்தியமைக்க வேண்டும். எங்களது தீர்மானங்கள், தணிக்கையாளர்களின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும், வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை இழப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

இதர விவகாரங்கள்

5. வங்கியின் தனித்த நிதிநிலை முடிவுகளில் உள்ளடங்கியுள்ள 1,775 கிளைகளின் (அவற்றில் 178 செயலாக்க மையங்களின்) தனித்த நிதிநிலை அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்யவில்லை. இவற்றின் நிதிநிலை அறிக்கைகள்/நிதிநிலை தகவல் 2023 மார்ச் 31-ம் தேதி நிலவரப்படி முன்பணங்கள் 41.46%, வைப்புத் தொகைகள் 46.57% மற்றும் செயல்படா சொத்துகள் 57.25% ஆகவும் 2023 மார்ச் 31-ம் தேதி முடிவுற்ற நிதி ஆண்டின் வருமானம் 28.79% ஆகவும் இருந்தன. இந்தக் கிளைகளின் நிதிநிலை அறிக்கைகளை கிளை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்தனர். அவர்களின் அறிக்கைகள் எங்களிடம் வழங்கப்பட்டன. இந்தக் கிளைகளின் தொடர்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகள் மற்றும் வெளிப்பாடுகளைப் பற்றிய எங்களுடைய கருத்து முற்றிலும் சம்பந்தப்பட்ட கிளை தணிக்கையாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது.

6. எங்கள் தணிக்கையின்போது, அந்தந்த நிர்வாகத்தால் சான்றழிக்கப்பட்ட 4,362 கிளைகள்/அலுவலகங்களின் தணிக்கை செய்யப்படாத அறிக்கைகளை நாங்கள் கருத்தில்கொண்டோம். தணிக்கை செய்யப்படாத கிளைகள்/அலுவலகங்களின் 2023 மார்ச் 31-ம் தேதி நிலவரப்படி முன்பணங்கள் 21.99%, வைப்புத் தொகைகள் 52.03% மற்றும் செயல்படா சொத்துகள் 37.26% ஆகவும் 2023 மார்ச் 31-ம் தேதி முடிவுற்ற நிதியாண்டின் வருமானம் 14.74% ஆகவும் இருந்தன.

சட்டப்பூர்வ முதன்மை கணக்காய்வாளர்கள்

P K F SRIDHAR & SANTHANAM LLP
G NATESAN & CO
S A R C & ASSOCIATES
KAILASH CHAND JAIN & CO
S SINGHAL & CO

இயக்குநர்கள் சபை

S L JAIN	MANAGING DIRECTOR & CEO
ASHUTOSH CHOUDHURY	EXECUTIVE DIRECTOR
MAHESH KUMAR BAJAJ	EXECUTIVE DIRECTOR
ASHWANI KUMAR	EXECUTIVE DIRECTOR
IMRAN AMIN SIDDIQUI	EXECUTIVE DIRECTOR
MARUTHI PRASAD TANGIRALA	GOVT.NOMINEE DIRECTOR
ADITYA GAIHA	RBI NOMINEE DIRECTOR
BHARATH KRISHNA SANKAR	SHAREHOLDER DIRECTOR
PAPIA SENGUPTA	SHAREHOLDER DIRECTOR
BALMUKUND SAHAY	PART TIME NON OFFICIAL DIRECTOR
VISHVESH KUMAR GOEL	PART TIME NON OFFICIAL DIRECTOR

பொது மேலாளர்-CFO

இடம்: சென்னை

தேதி: 08.05.2023

இந்த வங்கியின் நிதிநிலை அறிக்கைகளின் முக்கிய பகுதிகளான குறிப்புகளையும் அட்டவணைகளையும் மேற்கண்ட அறிக்கைகளுடன் சேர்த்து வாசித்து முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். இவற்றை வங்கியின் ஆண்டறிக்கையில் காணலாம். இவற்றின் பிரதிகளைக் கீழ்க்கண்ட முகவரியில் கேட்டுப்பெறலாம்:

Chief Executive
Indian Bank, 3 Raffles Place, Bharat Building, Singapore 048617